| தேர்வு எண் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|

# மேனிலை இரண்டாம் ஆண்டு காலாண்டுப் பொதுத் தேர்வு 2017 - 18

நேரம் : 3 மணி] **கணிப்பொறி அறிவியல்** [மொத்த மதிப்பெண்கள் 150

## பகுதி – I

**சரியான விடையினை தேர்ந்தெடுத்து குறிப்பிடுக.** **75X1=75**

1. சொற்செயலிக்கு எடுத்துக்காட்டு ..............
   a) Star office b) Windows c) MS Office d) Word pro
2. உரை ஆவணத்தை திறப்பதற்கான கட்டளை எது ?
   a) File → New → Text b) File → Untitliled
   c) File → New → Text Document d) File → Document
3. புதிய உரைதோன்றுமிடம் ............
   a) செங்குத்து திரை உருளல் பட்டை b) செருகுமிடம்
   c) மின்னும் பட்டை d) கிடைமட்ட திரை உருளல் பட்டை
4. உரையை நகர்த்துவதற்கான சாவிச்சேர்மானம்
   a) Ctrl + C b) Ctrl + V c) Ctrl + X d) Ctrl + P
5. வடிவூட்டலுக்கு தேவையான கொடா நிலைமைகளின் தொகுப்பிற்கு ............ என்று பெயர்.
   a) Symbol b) Style c) Format d) Font
6. ஒரு அங்குலத்திற்கு எத்தனை புள்ளிகள்
   a) 71 b) 72 c) 73 d) 74
7. உள்தள்ளல் பணிக்குறியை கிளிக் செய்யும் போது பத்தியானது .............. அங்குலம் உள்தள்ளப்படும்.
   a) ½ அங்குலம் b) 1 அங்குலம் c) 2 அங்குலம் d) இவற்றில் ஏதுமில்லை.
8. அகராதியில் ஒரு சொல்லை சேர்ப்பதற்கான சாவி .............
   a) Add b) Change All c) Choice d) Replace
9. பிழைகளை திருத்த எத்தனை வழிகள் உள்ளது ?
   a) 1 b) 2 c) 3 d) 4
10. அட்டவணையை உருவாக்கப் பயன்படும் கட்டளை ................
    a) Table → Insert → Table b) Insert → Table→ Table
    c) Insert → Table d) a & c
11. அட்டவணையில் முன்புறமாக நகர உதவும் சாவி ?
    a) Shift b) Arrow c) Tab d) Enter
12. நெடுவரிசைகளை ஒரே அளவுள்ளதாக மாற்ற
    a) Line → Space Equally b) Table → Space equally
    c) Column → Space equally d) Row → Space equally
13. Page என்ற கட்டளை ............. பட்டியின் கீழ் உள்ளது
    a) File Menu b) Edit Menu c) Insert Menu d) Format Menu
14. பக்கத்தின் அகலம் நீளத்தை விட அதிகமானால் அந்த அமைவு ................
    a) போர்ட்ரைட் b) லேண்ட்ஸ்கேப் c) புதிய பக்கம் d) தலைப்பு
15. பக்க அமைவு எத்தனை வகைப்படும் ?
    a) 1 b) 2 c) 3 d) 4
16. வரிசையும் நெடுவரிசையும் சந்திப்பதால் ஏற்படுவது ..........
    a) அட்டவணைச்செயலி b) சிற்றறை c) அட்டவணைத்தாள் d) இவையேதுமில்லை
17. அட்டவணைச் செயலியின் சன்னல் திரையில் மேற்பகுதியில் தோன்றும் பட்டை
    a) பட்டிப்பட்டை b) பொருள் பட்டை c) வாய்பாட்டு பட்டை d) கருவிப் பட்டை
18. visicalc அட்டவணைச் செயலியில் உள்ள நெடுவரிசைகளின் எண்ணிக்கை யாது ?
    a) 64 b) 254 c) 63 d) 62
19. ஒவ்வொரு வாய்பாடும் ............ குறியுடன் தொடங்கும்.
    a) + b) * c) = d) %
20. அட்டவணைச் செயலியில் , எது ஒரு மிகுதியாகப் பயன்படும் சார்பு ?
    a) SQR b) AVG c) SUM d) POW
21. 'Quattro pro' எனும் அட்டவணைச் செயலியை உருவாக்கிய நிறுவனம் நிறுவனம்
    a) A&T நிறுவனம் b) சன் மைக்ரோ சிஸ்டம்ஸ் c) போர்லேண்ட் இண்டர்நேஷனல் d) மைக்ரோசாப்ட்
22. எண்கள் அல்லாத தரவுகள் ...............
    a) பரப்பு b) சிற்றறை c) அடையாளம் d) செயற்கூறு

23. Auto format உரையாடல் பெட்டியை அழைக்க உதவும் கட்டளை
    a) Format → Auto format
    b) Format → cells
    c) Format → column → width
    d) Auto format → Format
24. ஒரு நுண்ணறையை தனித்த நுண்ணறை முகவரியாக மாற்றும் குறியீடு
    a) #  b) $  c) ^  d) &
25. Insert cells பணிக்குறியை கிளிக் செய்யும் பொழுது அதில் தோன்றும் மிதவைக் கருவிப்பட்டையில் .......... பணிக்குறிகள் உள்ளன.
    a) 4 பணிக்குறிகள்  b) 3 பணிக்குறிகள்  c) 2 பணிக்குறிகள்  d) 5 பணிக்குறிகள்
26. தேதியை உள்ளிடும் முறை
    a) YY/ MM/DD  b) YY/ DD/ MM  c) DD.MM.YY  d) MM/DD/YY
27. அட்டவணைக்கோப்பை பதிப்பாய்வு செய்ய ............... பொத்தானை அழுத்த வேண்டும்.
    a) F7  b) F2  c) F5  d) F3
28. எந்த இயக்கி உண்மை அல்லது பொய் என்பதை விடையாகக் கொடுக்கும் ?
    a) எண்கணிதம்  b) ஒப்புமை  c) உரை  d) பார்வையிடு
29. அட்டவணைத்தாளை கட்டங்களுடன் அச்சிடப் பயன்படும் கட்டளை
    a) format → Grid
    b) Format → Print→ Grid
    c) Print → Sheet Tab → Grid
    d) Format → Page → Sheet Tab → Grid
30. A2,B2,C2,D2 மற்றும் E2 சிற்றரைகளை குறிப்பிடும் முறை
    a) A2 – E2  b) A2 , E2  c) A2:E2  d) A2; E2
31. ஸ்டார் பேஸில் எத்தனை தரவுத்தள வகைகள் உள்ளன ?
    a) 6  b) 5  c) 3  d) 2
32. ............... என்பது அட்டவணையின் புலங்களை நல்ல இடைவெளிகளோடு காட்டும் திரையாகும்.
    a) அறிக்கை  b) வினவல்  c) அட்டவணை  d) படிவம்
33. தரவுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப் பயன்படுவது ..........
    a) வரிசையாக்கம்  b) வடிகட்டல்  c) பதிப்பாய்வு  d) சேர்த்தல்
34. எந்த தரவுத்தள பதிவுகள் மரக்கிளை அமைப்பை போன்றதாகும் ?
    a) உறவுநிலை தரவுத்தளம்
    b) பொருள்நோக்குத் தரவுத்தளம்
    c) வலையமைப்பு
    d) படிநிலை தரவுத்தளம்
35. தரவுகளை வடிகட்டிய பின்பு மீண்டும் பழைய நிலையில் தரவுகளை பார்வையிட
    a) Remove filter / Sort icon
    b) Sort Icon
    c) Sort ascending icon
    d) Sort descendingorder
36. தரவுத்தளத்தை உருவாக்கப் பயன்படும் கட்டளை
    a) Edit → New → Database
    b) File → New → Database
    c) View → New → Database
    d) Sort order window
37. நிபந்தனையோடு பயன்படுத்தப்படும் வடிகட்டி
    a) Auto Filter  b) Query  c) Default Filter  d) Base Filter
38. பயன்பாடுகளுக்கிடையே மாற பயன்படும் சாவிச்சேர்மானம்
    a) Ctrl + Tab  b) Shift + Tab  c) Alt + Tab  d) Tab
39. DDE –ன் விரிவாக்கம் .
    a) Dynamic Data Embedding
    b) Data Direct Enable
    c) Dynamic Data Exchange
    d) Dot Direct Extract
40. அடிப்படை தரவினத்திற்கு எடுத்துக்காட்டு
    a) Integer  b) Float  c) Both a and b  d) None
41. வினவல்கள் என்பன ................ ன் சிறப்பு நோக்கு ஆகும்.
    a) படிவம்  b) அட்டவணை  c) தரவு  d) புலம்
42. MMS ன் விரிவாக்கம்
    a) Multimedia Messaging System
    b) Multiple message system
    c) Multiple method system
    d) Multimedia message software
43. மின் வழி கற்றலின் முக்கிய பதிப்பு
    a) CBT / WBT  b) CAD / CAM  c) CBT / CAM  d) CAD / WBT
44. வழக்கில் உள்ள, பல்லூடகக் கோப்புகளை உருவாக்கும் மென்பொருள்
    a) Flash  b) Dream Weaver  c) Maya  d) All the above
45. .............. இழப்புடைய குறுக்க முறையில் செயல்படுத்துவதாகும்.
    a) BMP  b) SWF  c) JPEG  d) BMP
46. Shock wave படிவத்தின் நீட்சி
    a) .swf  b) .sfw  c) .wbi  d) .fsw

47. IBM மற்றும் Microsoft நிறுவனங்கள் இணைந்து உருவாக்கிய படிவம்
a) WAV b) MPEG c) AVI d) MIDI
48. தொடர்பு கொள்வதில் மிகவும் சிறந்து விளங்குவது எது ?
a) வரைபடங்கள் b) தரவு தளம் c) நிகழ்த்துதல் d) உரை
49. புதிய நிகழ்த்துதலை உருவாக்கப் பயன்படும் சாவிச் சேர்மானம்
a) Shift + N b) Shift + Ctrl + N c) Ctrl + N d) Alt + N
50. ............... பக்கம் எல்லா சில்லுகளிலும் வரவேண்டிய பின்னணி செய்திகளை சேர்க்க உதவுகிறது.
a) Master b) Layouts c) Custom d) Slide Transition
51. சில்லுவின் வரிசை முறையை மாற்ற நாம் கிளிக் செய்ய வேண்டியது
a) Custom Slide b) Insert c) Slide sorter d) New
52. ஒளிக்காட்சியை சில்லுவில் சேர்க்க பயன்படும் கட்டளை
a) Insert → Picture Sound b) Insert → Movie and sound
c) format → Movie and sound d) Insert → Picture and Sound
53. எந்த சில்லுவிலிருந்து நிகழ்த்துதல் தொடங்கும் ?
a) முதல் b) மையம் c) நடப்பு d) கடைசி
54. சில்லுவின் காட்சி நேரத்தை பதிவு செய்யப் பயன்படும் இணைப்பு
a) Rehearse b) Display c) Schedule d) Automatic
55. Media player ஏற்கும் படிவ வகைகள் ...................
a) Audio படிவம் b) Video படிவம் c) a மற்றும் b d) .avi
56. உள்ளீட்டு, வெளியீட்டுத்தரவுகள் ............... எனப்படும்.
a) மாறிலி b) தரவு c) மாறிகள் d) சரங்கள்
57. பொருள் நோக்கு நிரலாக்க மொழிக்கு எ– கா
a) BASIC b) C++ c) COBOL d) Visual Basic
58. தரவுகளும் தொடர்புடைய செயற்கூறுகளும் ............ எனப்படும்.
a) பொருள் b) தரவு c) பண்பு d) இனம்
59. பொருள் என்பது குறிப்பிட்ட செயற்பரப்புடன் கூடிய .................ஆகும்
a) நிரல் b) துணை நிரல் c) செயற்கூறு d) பொருள்
60. ............. இனக்குழு தனக்குறிய தனித்தன்மையோடும் அடிப்படை செயலாற்றலையும் பெற்றுள்ளது.
a) தருவிக்கப்பட்ட இனக்குழு b) அடிப்படை இனக்குழு
c) இனக்குழு d) பொருள்
61. C++ மொழியை உருவாக்கியவர்
a) ஜேம்ஸ்கோஷ்லிங் b) ஜேர்ன் ஸ்ட்ரௌஸ்டப் c) ஜான் கெம்னி d) தாமஸ் குஷ்
62. கணிப்பொறி மொழியின் நிரல் பெயர்ப்பிக்கு புரிகின்ற சொல் ............
a) தொகுப்பான் b) சிறப்புச்சொற்கள் c) மாறி d) மாறிலி
63. மாறி .............. என அழைக்கப்படும்
a) மாறிலி b) குறிப்பெயர்கள் c) காட்சி d) சரம்
64. $8564 \times 10^{-2}$ என்பதனை எவ்வாறு குறிப்பிடுவது
a) 8586 E2 b) 8564 E-2 c) 85.64 E-2 d) 8.564 E3
65. மணி ஒலிப்புக்கு பயன்படும் விடுபடு வரிசை எது ?
a) \a b) \b c) \n d) \t
66. ............... இரட்டை மேற்கோள் குறிக்குள் தரப்படும் வரிசையாகும்
a) மாறிலி b) எழுத்து c) எண்கள் d) சரநிலையுரு
67. இடம் பெறும் செயலேற்பிகளின் எண் இடம் பெறும் செயற்குறி .......... வகைப்படும்.
a) 3 b) 4 c) 2 d) 5
68. ஒரேயொரு செயலேற்பியை ஏற்கும் செயற்குறி
a) இரும b) ஒரும c) மும்ம d) பிட்நிலை
69. கூட்டல், பெருக்கல், நகர்வு, பிட்டுநிலை, தருக்கம் மற்றும் மதிப்பிருத்து செயற்குறிகள் போன்றவை ......... எனப்படும்
a) இரும b) ஒரும c) உறவுநிலை d) நிபந்தனை
70. முழு எண் வகுமீதி செயற்குறி .......................
a) / b) \ c) % d) /=
71. ஒரு அணியின் ஒரு தொகுதியை குறிப்பிட பயன்படும் குறி எது ?
a) { } b) [ ] c) ( ) d) /*
72. C++ தரவினங்களை ............ வகைகளாக பிரிக்கலாம்.
a) 2 b) 3 c) 4 d) 5
73. Static மற்றும் Register மாறி அறிவிக்கப்படும்பொழுதே .......... என்ற மதிப்பை ஏற்கும்.
a) 1 b) 2 c) 0 d) 3
74. மாறிகள், அறிவிக்கப்படும் செயற்கூறு அல்லது தொகுதி முடிந்தபின் கணிப்பொறி நினைவகத்தில் தங்கியிருக்க ............ வகை செய்கிறது,
a) Auto b) Register c) Extern d) Static

75. முழு எண் தரவினத்தின் வீச்சு
   a) -32767 to 32768   b) -32768 to 32767   c) 32768 to 32769   d) 32767 to 32768

## பகுதி - II

**ஏதேனும் இருபது வினாக்களுக்கு மட்டும் ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.** **20 x 2 = 40**

76. சொற் செயலாக்கம் என்றால் என்ன ?
77. வரி இடைவெளியை மாற்ற வழிமுறைகள் யாவை ?
78. உரையை தட்டச்சு செய்யும் பொழுது எழுத்துப்பிழையை எவ்வாறு கண்டறிவாய் ?
79. அட்டவணையின் நெடுவரிசை அகலத்தை எவ்வாறு மாற்றுவாய் ?
80. அடிக்குறிப்பு என்றால் என்ன ? பக்க எண்ணை எவ்வாறு புகுத்துவாய் ?
81. மின் அட்டவணைச்செயலி வரையறு.
82. நுண்ணறைப்பார்வையிடலின் வகைகள் பற்றி குறிப்பு வரைக.
83. உரை இயக்கி – குறிப்பு வரைக
84. செயற்குறிகளுக்கான முன்னுரிமை பற்றி எழுதுக.
85. முதன்மைத் திறவுகோள் – வரையறு.
86. வினவலுக்கும் வடிகட்டிக்கும் உள்ள வேறுபாடு கூறுக.
87. கணிப்பொறி வழி தரவுச்செயலாக்கத்தின் நன்மைகள் நான்கினை எழுதுக.
88. பல்லூடகம் என்றால் என்ன ?
89. முப்பரிமான அசைவுப்பட நிலைகள் யாவை ?
90. பின்வருவனவற்றின் விரிவாக்கத்தினை எழுதுக.
   a) MIDI   b) AIFF   c) MPEG   d) AVI
91. இலக்க முறையாக்கல் என்றால் என்ன ?
92. நிகழ்த்துதல் சில்லுவில் பல்வேறு காட்சி முறைகள் யாவை ?
93. நிகழ்த்துதல் சில்லுவை சேர்த்தல், நீக்குதல், மற்றும் பெயர் மாற்றம் செய்வது எப்படி ?
94. Custom Animation என்றால் என்ன ?
95. வில்லைகள் என்றால் என்ன ?
96. சிறப்புச் சொற்கள் – குறிப்பு வரைக.
97. குறிப்பு வரைக – தரவு வகை.
98. C++ –ல் சேமிப்பு இனக்குழுக்கள் என்பவை யாவை ?
99. பயனர் வரையறுக்கும் தரவினத்தை பட்டியலிடுக.
100. பின்வருவனவற்றை கணக்கிடு.
   a =5, b = 3, d = 1.5 C என்பது integer வகை மற்றும் F என்பது மிதவைப்புள்ளி வகை.
   1) F = a+ b / aC = d * a + b

## பகுதி - III

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7 x 5 = 35**

101. ஸ்டார் ஆபிஸ் ரைட்டரில் ஒரு சொல்லுக்குப் பதிலாக பிறிதொரு சொல்லை எவ்வாறு புகுத்துலாய் ?
102. ஸ்டார் ஆபிஸ் ரைட்டரின் தானியங்கு சரிசெய்யும் பட்டியலில் ஒரு சொல்லை எவ்வாறு சேர்க்கலாம் ?
103. அட்டவணை வடிவூட்டல் கருவிப் பட்டையில் உள்ள குறும்படங்களை வரைந்து விளக்கவும்.
104. அட்டவணைச் செயலியைக் கொண்டு ஒரு எண் வரிசையை எவ்வாறு உருவாக்குவாய் ? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
105. சார்புகள் என்றால் என்ன ? அவற்றை அட்டவணைத்தாளில் எவ்வாறு பயன்படுத்துவாய் ? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
106. அட்டவணைத்தாளில் எவ்வாறு வரிசை, நெடுவரிசை மற்றும் சிற்றரைகளை சேர்ப்பாய் ?
107. தரவுத்தளத்தை கையாளும் வழிமுறைகள் யாவை ?
108. தரவுத்தளத்தில் படிவத்தை எவ்வாறு உருவாக்குவாய் என்பதை விவரி ?
109. குறிப்பு வரைக.
   1. பொருள்   2. மரபுரிமம்   3. உரை பொதியாக்கம்
   4. பல்லுருவாக்கம்   5. தரவு அருவமாக்கம்
110. வெளியீடைக் காண்க.

```
# include < iostream .h>
#include < conio.h>
void main( )
{
int n1 = 10, n2;
n2 = n1;
n2 ++ ;
cout << n2;
}
```